1989 மே 4]

சுத்தமான குடிநீர் வைக்கப்பட்டு போய் வருகின்ற பயணி களுக்கு வசதி செய்யப்பட்டிருந்தது. கொஞ்ச நாட்களாக அந்தக் குடிநீர் வசதி கூட இல்லை. இங்கே மாண்புமிகு உறுப் பினர்கள் அந்தக் குறைகளை எல்லாம் தெரிவித்ததற்கு பிறகு தற்போது குடிநீர் வசதி உடனடியாக செய்யப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழகத்திற்கு அறி வுறுத்தப்பட்டுள்ளது.

திரு. ஜி. பழனிச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாமண்டூர் என்கிற ஊரிலுள்ள நட்சத்திர ஹோட்டல்களில் அனைத்து திருவள்ளுவர்பஸ்களும நிறுத்தப்படுகின்றன. பிர யாணம் செய்யகூடியக் பிரயாணிகளும் அங்குள்ள ஹோட் டல்களிலே சாப்பிட்டு சிரமத்திற்கு ஆளாக்கப்பட்டு இருக் கிறார்களே, டிரைவர், கண்டக்டரைக் கேட்டால் அரசு அப்படி உத்திரவு போட்டிருப்பதாகச் சொல்கிறார்களே. ஆகவே, வேறு நகரங்களில் நிறுத்தி, உணவு உட்கொள்வதற்கு அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட உணவு விடுதிக்கு முன்னாலேதான் நிறுத்த வேண்டும் என்று அரசு எந்தவிதமான உத்தரவும் போட வில்லை. அதில் ஏதாவது குறைகள் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பாரேயானால், நட வடிக்கை மேற்கொள்ளலாம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள்.

195—(*வினா எண். 869) திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம், பவானி சாகர், புஞ்சைப் புளியம்பட்டி, நம்பியூர் ஆகிய பகுதிகளில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

[1989 மே 4

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே,

(அ) பெரியார் மாவட்டம், பவானி சாகர் புஞ்சைப் புளியம்பட்டி, நம்பியூர் ஆகிய பகுதிகளில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகட்டும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி சாகர் டவுன்ஷிப் இடம். இருக்கின்ற நிலம் அத்தனையும் அரசாங்கத்திற்கும், பொதுப்பணித் துறைக்கும், டவுன்ஷிப்பிற்கும் சொந்தமானது. அங்கே தனியார்கள் வீடு கட்டி இருப்பதற்கோ மற்றதற்கோ வாய்ப்புகள் அதிகமாக இல்லை. ஆகவே அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்தோ அல்லது விலைக்கு வாங்கியோ வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டி, அந்தப் பகுதியிலே இருக்கின்றவர்களுக்குக் கொடுக்கலாம் என்ற ஒரு திட்டத்தின் பேரில்தான் முன்னாலிருந்த வாரியத் தலைவர் அங்கே வந்து ஆய்வு செய்து, அந்தத் திட்டம் அங்கே துவங்குவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்றும், அந்தக் கோப்புகள் கூட அரசிற்கு வந்து பொதுப்பணித் துறைக்கு அனுப்பப்பட்டு, அந்த நிலத்தை விலைக்கே கொடுக்க வேண்டும். என்ற அடிப்படையிலே ஒரு உத்தரவு கூட வரவேண்டும் என்று கேட்டிருப்பதாகத் தகவல். ஆகவே, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவசியம் செய்து தருவதற்கு முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அப்படிப்பட்ட ஒரு திட்டம் இருந்தது. ஆனால், 1988-வது ஆண்டிலே கவர்னருடைய ஆட்சிக் காலத்திலே தமிழ்நாடு முழுவதிலும் இவ்வளவு அதிகமான இடங்களிலே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்க நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டுமா— 4(1) நோட்டிபிகேஷன் தமிழ்நாடு முழுவதிலும் பெரிய பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. ஆகவே, ஒரு வல்லுநர் குழுவை நியமித்து எங்கெங்கே உடனடியாக 10 ஆண்டுகளுக்குள்ளே எடுத்துக் கொள்ள முடியும் என்று ஆய்வு செய்து முடிவு செய்திருக்கிறார்கள். 28—10—1988-இலே பிறப்பிக்கப்பட்ட ஆணையின் மூலம், இந்தக் கேள்வியிலே

1989 மே 4]

சொல்லப்பட்டிருக்கின்ற பவானி சாகர், புஞ்சைப்புளியம்பட்டி, நம்பியூர் ஆகிய பகுதிகளுக்கு இந்தக் காலக் கட்டத்திலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அவசியம் இல்லை என்ற அளவிலே ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. சின்னசாமி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வது, பவானி சாகரைப் பொறுத்த மட்டில் ஒரு சென்ட் நிலம் கூட தனியாருக்கு —அங்கேயிருக்கின்ற சுற்று வட்டாரத்து நிலங்கள் அத்தனையும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்கள். அணை கட்டும் போது அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். ஆகவே, அங்கே பணி புரிகின்ற அனைத்து அலுவலர்களுடைய ஆபீஸ்களும் அங்கே இருக்கின்றன. அங்கே இருக்கின்ற அதிகாரிகள் தங்குவதற்குக் கூட இட வசதி கிடையாது. அவர்கள் சத்தியிலேயும், கோபியிலேயும், வேறு கிராமங்களிலேயும் இருந்து வருகிறார்கள். அல்லது வேறு இடங்களிலிருந்து வருகிறார்கள். ஆகவே, அங்கே நிச்சயமாக மறு பரிசிலனை செய்து, புஞ்சைப் புளியம்பட்டி, நம்பியூர் கூட பின்னாலே கட்டிக் கொள்ளலாம், பவானி சாகரிலே அவசியம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து நிச்சயமாகச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு நிச்சயமாகச் செய்ய முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஏற்கனவே 1988-வது ஆண்டிலே கைவிடப்பட்டிருக்கின்றது என்று நான் சொன்னேன். ஆனால் எப்போதும் எடுக்க முடியாது என்ற நிலை இல்லை. ஏற்கனவே பள்ளிப்பாளையம் அருகிலே ஏறத்தாழ 1300 வீடுகள் கட்டப்பட்டு கால் பகுதி வீடுகளில் கூட இன்னும் அங்கே குடியிருக்க வரவில்லை. அங்கே அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கின்றது. பவானி சாகரிலே உள்ளபடியே தேவையிருந்தால், அவசியம் இருந்தால் நிச்சயமாக 35 நோட்டிஸ் டவுன்ஸ் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதை 36-ஆக ஆக்கிவிடுவதிலே எந்தவிதமான சிரமமும் இல்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன் வந்து அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு ஏதுவாக நடவடிக்கை எடுக்க உதவி செய்தால் உள்ளபடியே,

அந்தஇடத்திலும்,35-க்குப் பதிலாக, 36-ஆவது நோடல் டவுனாக அதை ஆக்கிக் கொண்டு, அந்தத் திட்டத்தை நாம் நிறை வேற்றிட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி அவர்கள் முன் வந்தால் ''அதற்கு சின்னசாமி— கந்தசாமி கூட்டுத் திட்டம்'' என்று பெயர் வைக்கலாமா? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: அரசிற்கு ஆட்சேபணை இல்லை (சிரிப்பு).

மேலூரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள்

196*வினா எண். 1731 (திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை) அமைச்சர்கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி, மேலூரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே,

(அ) மேலூர் சட்ட மன்றத் தொகுதி, மேலூரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்ட அரசிடம் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வேலை இடைக்காத இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை

197(*வினா எண்.608(திரு. ஆர். சிங்காரம் மற்றும்திரு.ஆர்.எட்டியப்பன்: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

வேலை கிடைக்காத இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை இரட்டிப்பாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?